



# திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம்
# களாம்பாக்கம் ஊராட்சி

## உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் (திட்டமில்லாப்பகுதி)

மாவட்டம் : திருவள்ளூர்
வட்டம் : திருத்தணி
கிராமம் : களாம்பாக்கம்

நில அளவை எண்கள் : 66/14B,67/1B,2,3-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

இணையதள விண்ணப்ப எண் : 83ZDZPIQ
அளவு : 1:400

குறிப்பு

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பு | : | 11730.00 ச.மீ. |
| சாலைக்குரிய பகுதி | : | 4014.81 ச.மீ. |
| சாலையின் பரப்பு போக மனைப்பிரிவு இடத்தின் பரப்பு | : | 7715.19 ச.மீ. |
| கோரிய மனைகள் | : | 90 |
| ஒதுக்கிய மனைகள் | : | 87 (74+14) |
| EWS மனைகள் | : | 54-58, 75-83 |
| EWS மனைகள் பரப்பு | : | 815.0 ச.அடி (10.56%) |

## பொது ஒதுக்கீடுகள்:
## உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பகுதி:

| | | |
|---|---|---|
| பூங்கா | : | 780.0 ச.மீ (10.11%)............ |
| உள்ளாட்சிக்குரிய பகுதி | : | 96.31 ச.மீ (1.25%).............. |
| TANGEDCO - உரிய பகுதி | : | 52.42 ச.மீ (0.68%).............. |

மனைப்பிரிவு இடத்தின் எல்லை..............................................................

நிலையிலுள்ள சாலை..............................................................

உத்தேச மனைப்பிரிவு சாலை..............................................................

| | | | |
|---|---|---|---|
| கட்டிட வரம்பு | : | 7.2மீ அகல சாலைக்கு | - 1.5மீ, |
| | | 9.0மீ - 18.0மீ அகல சாலைகள் வரை | - 3.0மீ, |
| மூலை முடக்கு | : | 12.0மீ அகல சாலைகள் வரை | - 1.5மீ x 1.5மீ |

### நிபந்தனைகள்

1. அரசாணை எண்.18 மற்றும் எண்:16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019 மற்றும் 31.01.2020-ன்படி சாலைகள் மற்றும் மூலை முடக்கு ஆகிய நிலப்பரப்பினை மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பின்னரே இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.
2. நில உரிமை குறித்து உள்ளாட்சியால் உறுதி செய்யப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் ஒப்புதலளிக்கும் முன் இடத்தில் எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் உள்ளாட்சி நிர்வாக அதிகாரி உறுதி செய்துகொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்குத் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.
6. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்பந்தப்பட்ட இடத்தில் 6'x4' என்ற அளவுக்குக் குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
7. EWS மனைகள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்காக ஒதுக்கப்பட்டதாகும். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ, மாற்றியமைக்கவோ கூடாது.

### சிறப்பு நிபந்தனை

நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயப் பத்திரம், குத்தகைப் பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்குச் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

**SWP/DTCP/TVLR/LAYOUT No:49/2023**

N

*Signature Not Verified*
*Signed by: Assistant Director*
*Location:Tiruvallur*
*Date:2023.03.07 13:18:52*

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்